[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 பிப்ரவரி 11

அதேபோல், இராமமூர்த்தி கமிஷனை இந்த அரசாங்கம் போட்டிருக்கிறது. முதலமைச்சர் பேரிலும் அதேபோல் வருவாய்த்துறை அமைச்சர் பேரிலும், அதுபோல் பல அமைச்சர்கள் பேரிலும் கமிஷனைப் போட்டியிருக்கிறீர்கள் அதனுடைய முடிவு அரசாங்கத்திற்கு ஒருவேளை விரோதமாக வருமேயானால். வராது என்பது எனக்குத் தெரியும்.—ஒருவேளை வருமேயானால், முதலமைச்சர் அவர்களும், மற்ற அரசாங்க அதிகாரிகளும் இராமமூர்த்தி கமிஷன் செய்தது தப்பு, இதை இப்படிப் பார்த்திருக்கவேண்டும். இதை அப்படி கன்சிடர் செய்திருக்க வேண்டும் என்று அப்பலெட்கோர்ட்போல நீங்கள் அதன்மீது உட்காரப் போகிறீர்களா ?

இந்தக் கொலையைச் செய்வதற்கு மிக முக்கியமான காரணமாக இருந்தவர், ராஜினாமா செய்திருக்க வேண்டும். இன்னார் என்று நான் சொல்லவில்லை. முதலமைச்சர் என்று சொல்லவில்லை. குறைந்தபட்சம் அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சராவது ராஜினாமா செய்திருந்தால், அது நியாயமாக இருந்திருக்கும். ஆனால் ராஜினாமா செய்ய மாட்டார்கள். என்றைய தினம் மக்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறார்களோ அன்றைய தினம் தான் செல்வார்கள் என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

2. அறிவிப்புகள்.—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

12—2—1982 (வெள்ளி) மற்றும் 13—2—1982 (சனி)	நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கை பரிந்துரைகள் மீதும் அரசு எடுத்த நடவடிக்கை பற்றி 2—2—1982 அன்று பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கை மீதும் விவாதம்.
14—2—1982 (ஞாயிறு)	விடுமுறை.

15—2—1982 (திங்கள்)	..	திரு. எம். ஏ. முருகேசன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் மீதும் அரசு எடுத்த நடவடிக்கை பற்றி 30-4-1982 அன்று பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கை மீதும் விவாதம்.
16—2—1982 (செவ்வாய்) 17—2—1982 (புதன்)	..	அரசினர் சட்டமுன்வடிவுகள்.
18—2—1982 (வியாழன்)	..	(1) அரசினர் சட்ட முன்வடிவுகள் (2) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் 1980–81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் விவாதம். பேரவை மாலையிலும் கூடும்.
19—2—1982 (வெள்ளி)	..	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் 1980–81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலைஅறிக்கையின் மீதும் விவாதம்.

(6) அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

நீதிபதி பால்கமிஷன் அறிக்கை மீதும் அரசு நடவடிக்கை குறித்தும் விவாதம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அவையிலே இன்று வாதத்திற்கு எடுக்கப் பட்டிருக்கிற நீதிபதி பால் அவர்கள் அறிக்கையின் மீதும் அது தொடர்பாக அரசாங்கம் வைத்திருக்கிற குறிப்பின்மீதும் சில கருத்துக்களைச் சொல்லக் கிடைத்த வாய்ப்புக்காக காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நன்றி. தெரிவித்துக் கொள்கிறேன்

திருச்செந்தூர் அலை கடலருகே முருகன் இருக்கிற மிக உயர்ந்த தலம். அந்தத் தலத்திலே சோதனை அதிகாரியாக அல்லது சரிபார்ப்பு அதிகாரியாக இருந்த திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் மரணம் குறித்து ஏற்பட்டிருக்கின்ற ஐயத்தி தின் அடிப்படையிலே நீதிபதி அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்